# மொழியியல் நோக்கில் தமிழ் - சிங்கள மொழிகளின் வேற்றுமை உருபுகள்

**கவிப்பிரியா கின்சிலி வில்பிரேட்**

மொழியியல் ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
*kavippiriyalaxsy@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம் –** மனிதன் தனது எண்ணங்கள், சிந்தனைகள், விருப்பு, வெறுப்புக்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தும் ஊடகமே மொழி ஆகும். உலகில் பயன்பாட்டிலுள்ள மொழிகள் அவற்றின் இயல்பு, தன்மை ஆகியவற்றிற்கேற்ப பல்வேறுபட்ட மொழிக்குடும்பங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் தமிழ், சிங்கள மொழிகள் முறையே திரவிட, இந்தோ - ஆரிய மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளாக விளங்குகின்றன. தமிழ், சிங்கள மொழிகள் தமக்கெனத் தனித்துவமான இலக்கண அமைப்புக்களைக் கொண்டுள்ளன. அவ்வகையில் வேறுபட்ட மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள வேற்றுமை உருபுகளுக்கிடையே நிலவுகின்ற தொடர்புகளை விளக்கும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்விருமொழிகளிலுமுள்ள வேற்றுமை உருபுகளுக்கிடையே நிலவுகின்ற தொடர்புகள் தமிழ்கிளைமொழிகளில் யாழ்பாணத்தமிழையும் சிங்களக்கிளைமொழியில் மேற்குக்கிளைமொழிகளில் ஒன்றாக கொழும்புச் சிங்களக்கிளைமொழியையும் அடிப்படையாக கொண்டு விளக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் –** சிங்கள மொழி, தமிழ் மொழி, மாற்றீட்டு வேற்றுமைகள், வேற்றுமை உருபுகள், வேற்றுமைத் தொழிற்பாடுகள்.

## I. ஆய்வுநோக்கம்

தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள வேற்றுமைகளுக் கிடையில் காணப்படுகின்ற தொடர்புகளையும் ஒற்றுமை, வேற்றுமைகளையும் அவை பயன்படுத்தப்படுமாற்றையும் விளக்குவதை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## II. ஆய்வு எல்லையும் ஆய்வுமுறையியலும்

இவ்வாய்வு இலங்கையின் மொழிப்பயன்பாட்டிலுள்ள தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமை உருபுகளை அதிலும் குறிப்பாக தமிழ்க் கிளைமொழிகளில் யாழ்ப்பாணத்தமிழிலும் சிங்களக்கிளைமொழிகளில் கொழும்புச் சிங்களக்கிளைமொழியிலும் வழக்கிலுள்ள வேற்றுமை உருபுகளை ஆய்வு எல்லையாகக் கொண்டுள்ளது. இவ்விரண்டு கிளைமொழிகளுக்கும் எழுத்துமொழியுடன் நெருங்கிய தொடர்புள்ளமையே அவற்றைத் தெரிவுசெய்தமைக்கான காரணமாகும். இவ்வாய்வு ஒப்பீட்டாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டு விளக்க ஆய்வுமுறையின் ஊடாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

## III. இலக்கிய மீளாய்வு

தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமைகள் பற்றி தனித்தனியாக பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் அரங்கராசன் மருதூர் அவர்களின் தமிழில் வேற்றுமைகள் (2000), அ. சண்முகதாஸ் அவர்களின் தமிழ்மொழி இலக்கண இயல்புகள் (1989), க. சொக்கலிங்கம் அவர்களின் இலக்கணத்தெளிவு (1981), எம். ஏ. நுஃமான் அவர்களின் அடிப்படைத் தமிழ் இலக்கணம் (2009), ரங்கநாயகி மஹாபாத்ரா அவர்களின் இன்றைய தமிழ் இலக்கண வழக்கும் பேச்சு வழக்கும் (1985), ஸ்ரீ இந்துஸனண் அவர்களின் சுஜிகலா சிங்கள தமிழ் ஆசிரியன் - பாகம் I (2004), J.W.Gair அவர்களின் Colloquial Sinhala Clause Structures (1970), W.S. Karunatillake அவர்களின் An Introduction to spoken Sinhala (1998) ஆகிய படைப் புக்கள் முக்கியமானவையாகும். எனினும் இரு மொழிகளினதும் வேற்றுமைகளை ஒப்பிட்டு பல்கலைக்கழகமட்டங்களிலேயே சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வகையிலேயே தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமை உருபுகளை மொழியியல் நோக்கில் ஒப்பிட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## IV. ஆய்வுக்கருதுகோள்

வேறுபட்ட மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமை உருபுகளுக்கிடையே நுணுக்கமான வேறுபாடுகள் காணப்படுகின்ற அதேவேளை சில வேற்றுமைகளும் காணப்படுகின்றன என்னும் கருதுகோளை அடிப்படையகா கொண்டமைந்துள்ளது.

## V. தரவு சேகரிப்பு முறை

யாழ்ப்பாணத் தமிழ்க்கிளைமொழி, கொழும்புச் சிங்களக்கிளைமொழி முதலியவற்றின் பேச்சு வழக்கினை நேரடியாக அவதானித்ததிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை முதன்னிலைத் தரவாகவும் தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமை அமைப்புக்கள், அவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பான நூல்கள், பருவஇதழ்கள், மாநாட்டு மலர்கள், துண்டுப்பிரசுரங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், வாழ்வியற்களஞ்சியங்கள், ஆய்வேடுகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### VI. ஆய்வுப்பயன்

இவ்வாய்வானது தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமைகள் தொடர்பாக கற்போருக்கும் கற்பிப்போருக்கும் பயனுள்ளதாக அமைவதுடன் தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமைகள் தொடர்பாக ஆய்வு செய்வோருக்கும் பயனுள்ளதாக அமையும்.

### VII. அறிமுகம்

மனிதனின் கருத்துப் பரிமாற்ற ஊடகமாக மொழி விளங்குகின்றது. மொழி ஒலி, ஒலியன், உருபன், சொல், பொருள், வாக்கியம் ஆகிய உட்கூறுகளை உள்ளடக்கியுள்ளது. ஒலியன்கள் குறிப்பிட்டதொரு ஒழுங்கில் ஒன்றுசேர்ந்து சொற்கள் உருவாகின்றன. அவ்வகையில் ஒவ்வொரு மொழியிலும் காணப்படுகின்ற சொற்கள் அவற்றின் பண்பு, தன்மை என்பவற்கேற்ப பல்வேறுபட்ட வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

அவ்வகையில் தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள சொற்கள் பல அறிஞர்களால் பல்வேறுபட்ட வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் வகைப்பாடானது பொதுவானதாக காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு பொருளினதோ இடத்தினதோ நபரினதோ பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல்லின் சிறப்பியல்பு வேற்றுமையை ஏற்பதாகும்.

பெயர்ச்சொல் உருபு ஏற்றோ, ஏற்காமாலோ பொருளை வேறுபடுத்தினால் வேற்றுமை எனப்படும். பெயரின் ஈற்றிலே பொருளை வேறுபடுத்தப் பயின்றுவரும் இடைச்சொல் வேற்றுமைஉருபு எனப்படும். வேற்றுமையுருபுகள் பெயர்ப்பொருள் வேறுபாடுகளை உணர்த்துகின்றன. அவ்வகையில் வேறுபடுவது பெயராகவும் வேறுபடுத்துவது உருபாகவும் காணப்படும். மொழிகளில் காலமாற்றம், தேவைப்பாடுகள் என்பவற்றுக்கேற்ப வேற்றுமைகள் அதிகரித்துச் [1] செல்கின்றன.

வேற்றுமைகளின் எண்ணிக்கை மொழிகளுக்கேற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தமிழ், சிங்கள மொழிகளுக்கு ஒன்பது, இலத்தீனுக்கு ஆறு, கிரேக்கத்திற்கு ஐந்து என வேற்றுமைகளின் எண்ணிக்கை வேறுபட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். ஒரு மொழியிலுள்ள வேற்றுமைகளின் எண்ணிக்கையை அம்மொழியின் அக்கால நிலையை உணர்ந்தே கூறவேண்டும். ஒரே மொழிக்குடும்பச் சேர்ந்த மொழிகளிலும் வேற்றுமைகளின் எண்ணிக்கை வேறுபடுகின்றன.

திராவிடமொழிகளில் எட்டிற்கும் மேற்பட்ட வேற்றுமைகள் உள்ளதெனக் குறிப்பிட்ட கால்ட்டுவெல் தமிழில் ஒன்பது வேற்றுமைகள் உள்ளதெனக் [2] கூறுகின்றார். பொதுவாகத் தமிழ்மொழியின் எழுத்து, பேச்சு வழக்குகளில் முறையே எட்டு, பத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. சிங்கள எழுத்து, பேச்சு வழக்குகளில் முறையே ஒன்பது, பத்து வேற்றுமைகள் காணப்படுபகின்றன. அவ்வகையில் தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமைகளுக்கிடையே காணப்படுகின்ற உறவுகளை ஒவ்வொரு வேற்றுமைகளாக நோக்குவோம்.

#### எழுவாய் வேற்றுமை ஐமுதலாம் வேற்றுமை

முதலாம் வேற்றுமை தமிழ், சிங்கள மொழிகளில் எழுவாய்ப் பொருளில் பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமைக்கு தமிழ், சிங்கள மொழிகளில் உருபுகள் இல்லை. பொதுவாக எழுவாய்ப் பெயர்ச்சொற்கள் இவ்வேற்றுமையினுள் அடங்குகின்றன. சிங்கள மொழியில் முதலாம் வேற்றுமையின் சில உயிருள்ள பன்மைச்சொற்கள் [-la] என்னும் ஒலியில் முடிவடைகின்றன. இங்கு பால், எண் முதலியன சுட்டிக்காட்டப்படுகின்றது.
உதாரணம் - [ma:ma:] - [ma:ma:la], [akka:] [akka:la], [malli] [mallila]

இத்தகைய பன்மைச்சொற்கள் அவற்றின் வடிவங்களோடு ஏனைய வேற்றுமை உருபுகளையும் ஏற்கின்றன. சிங்களமொழியில் இவ்வேற்றுமை ஒரு வசனத்தின் எழுவாயாக பயின்று வந்தாலும் மேலதிகமாக செயறப்படுபொருளாகவும் சில சமயங்களில் பயின்றுவருகின்றது. அத்துடன் இவ்வேற்றுமை சில சமயங்களில் இரண்டாம் வேற்றுமையுடன் கட்டிலாதுமாறிப் பயின்றுவருகின்றது.
உதாரணம் - எடுத்துக்காட்டாக [dostrə mahattəya: leddunvə balənəv: ˜ dostrə mahattəya: leddu balənəva] - வைத்தியர் ஐயா நோயாளியைப் பார்க்கிறார்.

அத்துடன் இவ்வேற்றுமை நான்காம் வேற்றுமையுடனும் கட்டிலாது மாறிப் பயின்றுவருகின்றது.
உதாரணம் - [gedərə enna ˜ gedərətə enna] – வீட்டுக்கு வாங்கோ,

**செயற்படுபொருள் வேற்றுமை [இரண்டாம் வேற்றுமை]**

இரண்டாம் வேற்றுமை தமிழ், சிங்கள மொழிகளில் செயற்படுபொருளில் பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமையை ஏற்கும் பெயரானது பொதுவாக வினையின் நேரடியான செயற்படுபொருளாக இருக்கும். இவ்வேற்றுமை தமிழ்மொழியின் எழுத்துவழக்கில் [-ay] என்னும் உருபையும் பேச்சு வழக்கில் [-ay], [-e] ஆகிய உருபுகளையும் கொண்டுள்ளதுடன் அவ்வுருபு திணை, பால். எண் என்பவற்றுடன் இணைந்து வரும். அத்துடன் இவ்வேற்றுமை குறிப்பிட்ட பெயரைச் சுட்டும்போது வேற்றுமை உருபையும் சுட்டாதபோது அருவ உருபையும் பெற்று பயின்றுவருகின்றது.

தமிழ்மொழியில் இரண்டாம் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல், நீக்கல், ஒத்தல், உடைமை முதலிய பொருள்களில் தொழிற்படுவதாக நன்னூல் கூறுகின்றது. எனினும் இப்பொருள்கள் வினையின் பொருள்களேயன்றி வேற்றுமையின் பொருள்களல்ல என தற்கால மொழியியலாளர்கள் கூறுகின்றனர்.

சிங்களமொழியில் இவ்வேற்றுமை ஒருமைப் பெயர்ச்சொற்கள் [-aa], [-a], [-u], [-hu], [-tə], [-atə], [-akə], [-ak] முதலிய உருபுகளையும் பன்மைப் பெயர்ச்சொற்கள் [-an], [-unə], [-n], [-val] முதலிய உருபுகளையும் ஏற்றுக்கொள்கின்றன. இவ்வேற்றுமை [-və] என்ற உருபைக்கொண்டு முடிவடைகின்றது.
உதாரணம் - [pi!!ayka!ay], [laməynvə]

அத்துடன் இவ்வேற்றுமை நேரடியான செயற்படுபொருளுள்ள வினைச்சொல் அமைப்பை உணர்த்தினாலும் எழுவாய் வேற்றுமையுடன் கட்டிலாதுமாறிப் பயின்றுவருகின்றது. எனினும் இந்நிலைமை கட்டாயமானதில்லை.
உதாரணம் -
[oyaa: mallivə evannə ˜ oyaa malli evannə] – நீங்கள் தம்பியை அனுப்புங்கள்
மற்றும் தமிழ், சிங்கள மொழிகளில் இரண்டாம் வேற்றுமையுடன் கொண்டு என்னும் வடிவத்தையும் இணைத்து வாக்கியநிலையில் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

உதாரணம் - மாமா என்னைக் கொண்டு உண்மை முழுவதையும் சொல்ல வைத்தார். [ma:ma: maŋ lava: sampu:rna ætta kiyevva:]

**கருவி வேற்றுமை [மூன்றாம் வேற்றுமை]**

தமிழ், சிங்கள மொழிகளில் மூன்றாம் வேற்றுமை கருவி, கருத்தா பொருள்களில் பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமைக்கு தமிழ்மொழியில் இலக்கிய வழக்கில் [-a:l], [-o:du], [-udan], முதலிய உருபுகளும் பேச்சுவழக்கில் [-a:lɛ] என்னும் உருபும் கருவிவேற்றுமைக்கு உரியதாக கருதப்பட்டது. பின்னர் [-o:du], [-udan] ஆகியவை பிரிக்கப்பட்டு உடனிகழ்ச்சி வேற்றுமையாக கருதப்பட்டது. தமிழ்மொழியில் [-a:lɛ] என்னும் உருபு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கருவிப்பொருளைக் குறிக்கமாட்டாது. இவ்வேற்றுமை கருவிப்பொருளில் மட்டுமல்லாது கருத்தா, காரணம், மூலப்பொருள் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை வெளிப்படுத்துகின்றது.

சிங்களமொழியில் இவ்வேற்றுமைக்கு ஒருமைப் பெயர்ச்சொற்களுக்கு [-a], [-ai], [-hu], [-ak] முதலிய உருபுகள் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை உயிருள்ளவற்றிற்கு [-geŋ] என்னும் உருபும் உயிரற்றவற்றிற்கு [-ŋ], [-en], [-n] முதலிய உருபுகளும் [3] பயன்படுத்தப்படுகின்றன. சிங்களமொழியில் [-in], [-en] என்னும் உருபுகளே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம் - [aðа:la], [amma:va:la]
[arahəŋ], [amma:geŋ]
மற்றும் உயிரற்ற பெயர்ச்சொற்கள் [-e/-ee] ஆகிய ஒலிகளில் முடிவடையும்போது அவை [-n] என்னும் ஒலியைச் சேர்த்துக்கொள்கின்றன.
உதாரணம் - [kadee ˜ kaden]
இவ்வேற்றுமையில் வேறுபட்ட உருபுகள் பெயர்ச்சொல்லின் வகையைப் பொறுத்துப் பயின்றுவருகின்றன. பொதுவாக பின்னொட்டுக்கள் உயிரற்ற பெயர்ச் சொற்ளில் அதிகமாகப் பயின்றுவருகின்றன.
உதாரணம் - எழுவாய் கருவி
ஒரு பேருந்து [bas ekə] [bas ekəŋ]
வகுப்பு [paŋtiyə] [paŋtiyəŋ]
சிங்களமொழியில் இவ்வேற்றுமை ஒரு செயற்பாட்டின் பெறுபேறு, குறிப்பிட்ட காலஎல்லை என்பவற்றையும் குறிக்க பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [ee laməyaa naŋ ma:sə hayəkin siŋhələ igənəgannəva] - இந்தப் பிள்ளைகள் ஆறுமாதம் சிங்களம் படிப்பார்கள்.
மற்றும் இவ்வேற்றுமை யாரிடம் கேட்பது யாரிடமிருந்து பெறப்பட்டது என்பதைக் காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் [dostarə mahattəyagən mee gæna ahannə] –

வைத்தியரிடம் இதுபற்றிக் கேளுங்கள்.
[unnæhæ leddungən vædiye aya kərənne nææ] - அவர் நோயாளிகளிடமிருந்து அதிகமான கட்டணங்களை அறவிடுவதில்லை.

மற்றும் இவ்வேற்றுமை ஒருவரைக்கொண்டு ஒரு வேலையைச் செய்தமை தொடர்பாக குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம் - [mahattəya laməyngən vædə kərəgannəva:] – பெரியவர் பிள்ளைகளிடமிருந்து வேலைவாங்கிக் கொண்டார்.

அத்தோடு ஏதாவதொரு குழுவிலிருந்து குறிப்பிட்ட ஒன்றை வேறுபடுத்திச் சொல்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [me: darə valin kotəsək........] - இந்த விறகுகளின் ஒரு பகுதி.
மற்றும் இவ்வேற்றுமையில் உயிருள்ள ஒருமை, பன்மை பெயர்ச்சொற்களில் சில சமயங்களில் ஜ-பநஸெ என்ற உருபு பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [-laməya:gən]
மற்றும் இவ்வேற்றுமை தமிழ், சிங்கள மொழிகளில் குறிப்பிட்டதொரு காலத்தை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - அவர் இன்னும் இரண்டு மணித்தியாலயத்தால வருவார்.
[eya: tava pæyə dekəkiŋ enəva:]

**உடனிகழ்ச்சி வேற்றுமை**

இவ்வேற்றுமை தமிழ், சிங்கள மொழிகளில் உடனிகழ்ச்சிப்பொருளில் பேச்சுவழக்கில் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வேற்றுமை எழுவாய் வினையின் நிகழ்வை இன்னொரு பெயரோடு பங்கிட்டுக்கொள்வதைக் குறிக்கின்றது. தமிழ் இலக்கணநூல்கள் இவ்வேற்றுமையை மூன்றாம் வேற்றுமையினுள் உள்ளடக்குகின்றன. ஆனால் இவ்வேற்றுமை பொருளாலும் உருபாலும் மூன்றாம் வேற்றுமையிலிருந்து வேறுபாடுவதால் தற்கால மொழியியலாளர்கள் இதனை தனி வேற்றுமையாகக் கருதுகின்றார்கள். இவ்வேற்றுமையின் உருபாக தமிழ் மொழியில் [-o:da], [-udan] முதலிய உருபுகளும் சிங்களமொழியில் [-t], [-ekkə] முதலிய உருபுகளும் பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம் - முருகனோட வாங்கோ
[murugaun ekkə ennə]
சிங்களமொழியில் சில சமயங்களில் மனிதரல்லாத பெயர்ச்சொற்களுக்கு [araŋenəvaa] என்னும் உருபு பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [palaturu araŋennə]
தமிழ்மொழியில் [-o:da] என்னும் உடனிகழ்ச்சி வேற்றுமையுருபானது உயிருள்ள, உயிரற்ற பெயர்ச்சொற்களோடு பயின்றுவருகின்றது. ஆனால் சிங்களமொழியில் உயிருள்ளவற்றிற்கு [-ekkə] என்னும் உருபையும் உயிரற்றவற்றிற்கு சில சந்தர்ப்பங்களில் [-araŋ] என்ற விகுதியுமேற்றுப் பயின்றுவருகின்றது.
உதாரணம் - பெட்டியோட, [pədd iyətekka]

கொடை வேற்றுமை ஜநான்காம் வேற்றுமைஸ

தமிழ்மொழியில் நான்காம் வேற்றுமை கொடை, குறிக்கோள், நோக்கம், உறவு, உடமை, திசை, உணர்வு, ஒப்புமை, இயற்கை போன்ற வெவ்வேறு பொருள்களைக் குறிப்பதாலும் அவற்றுள் சிறப்பான ஒன்றாக எதையும் கூறமுடியாததாலும் இதனை உருபின் பெயர்கொண்டு “கு வேற்றுமை” என அழைக்கின்றனர். தமிழ் மொழியில் இவ்வேற்றுமையின் உருபுகளாக [-ku], [-kku] என்பன பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வேற்றுமை சிங்களமொழியில் கொடைப்பொருளில் பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமையின் உருபுகளாக ஒருமைப் பெயர்ச்சொற்களுக்கு[-atə], [-a:ta], [-utə], [-hatə], [-hutə] முதலியனவும் பன்மைப் பெயர்ச்சொற்களுக்கு [-anitə], [-anatə], [-ntə], [-unhatə] முதலியனவும் பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம் - அவள் கடைக்குப் போனாள்.
[eya: kadayata giya:]
இவ்வேற்றுமை பேச்சுச்சிங்களத்தில் சுகயீனமாக இருக்கும் நோயாளியைக் குறிப்பதற்கும், காலம் தொடர்பாக குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [laməya:tə saniipə næ:] - பிள்ளைக்கு சுகமில்லை
[havasətə ennə] - மாலை நேரம் வாங்கோ

**நீங்கல் வேற்றுமை ஜஐந்தாம் வேற்றுமைஸ**

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை ஒன்றிலிருந்து விடுபடுதல் அல்லது நீங்கல் பொருளில் பயின்றுவருகின்றது. தமிழ் மொழியில் பெயரானது வினை தொடங்கும் இடமாகின்றது என்பதைக்காட்டும் இவ்வேற்றுமையை தற்கால இலக்கிய வழக்கில் தனியான ஒரு வேற்றுமையாகக் கொள்ளத் தேவையில்லை அதனை இடவேற்றுமையினுள் அடக்கிவிடலாம் என்னும் கருத்து நிலவுகின்றது.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளாக தமிழ்மொழியில் [-il], [-ila] முதலியன பயன்படுத்தப்படுகின்றன. இவை இடத்தைக் குறிப்பதுடன் ஒருவரிடமிருந்து அல்லது ஒன்றிடமிருந்து என்பதைக் குறிக்கவும் தமிழ்மொழியில் பயன்படுத்தப்படுகின்றது. சிங்களத்தில் ஒருமைப் பெயர்ச் சொற்களுக்கு [-in], [-en], [-egen], [-agen], [-ugen], [-hugen] முதலியனவும் பன்மைப் பெயர்ச்சொற்களுக்கு [-valin], [-angen], [-ngen], [-ugen] முதலியனவும் பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம் - கமலா பல்கலைக்கழகத்திலிருந்து போனாள். [kamala: višvəvidya:layen giya:]
[laməyagen praśnə ahannə epa:] – பிள்ளையிடமிருந்து கேள்வி கேட்க வேண்டாம்.
[3,ப 28].

**உடமை வேற்றுமை [ஆறாம் வேற்றுமை]**

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை உடமைப்பொருளில் பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமை ஒரு பெயருக்கும் பிறிதொரு பெயருக்கும் இடையேயுள்ள தொடர்பைக் காட்டுகின்றது. தமிழ்மொழியில் இவ்வேற்றுமையின் உருபுகளாக [-inta], [-a:γa], [-o:γa] முதலியன பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் தமிழ்மொழியில் உடமைப்பொருளில் தற்கிழமை, பிறிதின்கிழமை தவிர்ந்த வேறுபல பொருள்களையும் வெளிப்படுத்துகின்றது.

சிங்கள மொழியில் இவ்வேற்றுமையின் உருபுகளாக உயிருள்ள பெயர்ச்சொற்களுக்கு [-ge] என்பதும் உயிரற்ற பெயர்ச்சொற்களுக்கு ஐ-நநஸ என்பதும் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஒருமைப் பெயர்ச்சொற்களுக்கு [-agee], [-ugee], [-hugee]> [-a], [-u] முதலிய உருபுகளும் பன்மைப் பெயர்ச்சொற்களுக்கு [-angee], [-ungee], [-an], [-n] முதலிய உருபுகளும் [4] பயன்படுத்தப்படுகின்றன.
உதாரணம் - [piəəayinta vayasə]
[laməya:ge vayəsə]
இவ்வேற்றுமை சிங்கள மொழியில் உயிரற்ற பெயர்ச்சொற்களுடன் வரும்போது சில சமயங்களில் சாதாரணமாகவும் சில சமயங்களில் [-e:] என்ற உருபையும் ஏற்றுக்கொள்கின்றது.
உதாரணம் - எழுவாய் உடமை
[pantiyə], [pantiye:]
இவ்வேற்றுமையில் [-eka] என்னும் உருபில் முடிவடையும் உயிரற்ற பெயர்ச்சொற்கள் [-e:] என்ற உருபையும் சேர்த்துக்கொள்கின்றன.
உதாரணம் - [basekə] - [bas eke:]

இவ்வேற்றுமையில் [-ə], [-æ], [-æ:] முதலிய ஒலிகளில் முடிவடையும் உயிரற்ற பெயர்ச்சொற்கள் ə, [-e:] ஆகிய உருபுகளைச் சேர்த்துக்கொள்கின்றன. அவ்வாறு சேர்த்துக்கொள்ளும்போது பெயர்ச்சொல்லின் இறுதியில்வரும் உயிரெழுத்து நீக்கப்படுகின்றது.
உதாரணம் - [varədə] - [varəde]
சிங்களமொழியில் எழுவாய் வேற்றுமையில் இருப்பதைப் போன்றே இவ்வேற்றுமையிலும் சில சொற்கள் பயின்றுவருகின்றன.
உதாரணம் - [gedərə]
மற்றும் இவ்வேற்றுமையில் காலங்காட்டும் பெயர்ச்சொல்லானது [-di] என்னும் உருபுடன் பயின்றுவருகின்றது.
உதாரணம் - [labənə maasə tune:di matə demələ igənəgannə o:nə] – அடுத்துவரும் மூன்று மாதங்களில் நான் தமிழ் படிக்க வேண்டும்.
அத்தோடு இவ்வேற்றுமையுடன் [-di] என்னும் ஒட்டைச் சேர்க்கும்போது அந்தவேளை, அந்தஇடத்தில் ஆகிய பொருள்களில் பயின்றுவருகின்றது.
உதாரணம் - [bas ho:lt eke:di matə yaaluvek həmbə una:] - நான் வஸ்தரிப்பிடத்தில் வைத்து நண்பன் ஒருவனை சந்தித்தேன்.

**இடவேற்றுமை [ஏழாம் வேற்றுமை]**

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை இடப்பொருளில் பயின்றுவருகின்றது. தமிழ் மொழியில் இவ்வேற்றுமைக்கு இலக்கியவழக்கில் [-il], [-ila] முதலிய உருகளும் பேச்சுவழக்கில் ஐ-டையஸ, [-le] முதலிய உருபுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வேற்றுமை தமிழ்மொழியில் இடப்பொருள் தவிர காலம், காரணம், கருவி, ஒப்புமை போன்ற பொருள்களையும் உணர்த்துகின்றது. சிங்களமொழியில் இவ்வேற்றுமை ஒருமைப் பெயர்ச்சொற்களுக்கு [-e], [-ehi], [-hi] முதலிய உருபுகளையும் பன்மைப் பெயர்ச்சொற்களுக்கு [-anhi], [-vala] முதலிய உருபுகளையும் ஏற்றுக்கொள்கின்றது.
உதாரணம் - வீட்டில், புத்தகத்தில்
[gedəre]> [pote:]
சிங்களமொழியில் பிரயாணம் செய்தல், இடம் என்பவற்றைக் குறிப்பதற்கு [-e], [-ee] முதலிய விகுதிகளுடன் [-eŋ], [-iŋ] ஆகிய உருபுகள் இணைத்துப் பயன்படுத்தப்படுகின்றன. இதே போல தமிழில் [-ila] என்னும் உருபு பயன்படுத்தப்படுகின்றது.
உதாரணம் - [Reyinila], [ko:cciyeŋ]

சிங்களமொழியில் பொதுவாக குறிப்பிட்டதொரு காலத்தைக் குறிக்க [-ak di], [-eŋ], [-iŋ] முதலிய உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணம் - [ɛñjina:lila:], [davas pahakiŋ]

அத்துடன் இவ்வேற்றுமை சில சமயங்களில் நான்காம் வேற்றுமையுடன் கட்டிலாதுமாறிப் பயின்றுவருகின்றது.

உதாரணம் - [mamə gamətə yanəva ˜ mamə gamə yanə`va] - நான் ஊருக்கு போகுறேன்.

தமிழ், சிங்கள மொழிகளில் நீங்கல், இட வேற்றுமைகள் ஒரே வேற்றுமையுருபுகளைக் கொண்டருந்தாலும் நீங்கல் வேற்றுமை ஒரு பொருளிலிருந்து விடுபடல் அல்லது ஒரு இடத்திலிருந்து நீங்குதல் என்னும் பொருளிலும் இடவேற்றுமை இடப்பொருளிலும் பயின்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**விளிவேற்றுமை [எட்டாம் வேற்றுமை]**

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை விளிப்பொருளில் பயின்றுவருகின்றது. பேசுபவர் ஆச்சரியமான, அதிர்ச்சியான, வியப்பான விடயங்களைப் பேசுகின்றபோது பேச்சுவழக்கில் இவ்வேற்றுமை பயன்படுத்தப்படுகின்றது. அதாவது இவ்வேற்றுமை பெயரானது விளிக்கப்படும் பொருளாவதைக் காட்டுகின்றது. விளிவேற்றுமையில் வினைக்கும் விளிக்கப்படும் பெயருக்குமிடையே நேரடித் தன்மையான உறவில்லாததால் தற்கால மொழியியலாளர்கள் சிலர் இதனை வேற்றுமையாகக் கொள்வதில்லை.[5] தமிழ்மொழியில் இவ்வேற்றுமைக்கு உருபுகளில்லை. சிங்களமொழியில் இவ்வேற்றுமைக்கு [-e], [-ee] முதலிய உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணம் - [-ammee]!, [-ta:ttee]!

[5]. சொக்கலிங்கம்.க., (1981), இலக்கணத்தெளிவு, சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம், ப.41.

**குறிப்பீட்டு வேற்றுமை**

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை பேச்சுவழக்கில் மட்டுமே பயின்றுவருகின்றது. இவ்வேற்றுமையின் உருபுகளாக தமிழ்மொழியில் [-idday]> [-dday] முதலியனவும் சிங்களமொழியில் [-gen] என்னும் உருபும் சில சமயங்களில் உயிருள்ள பெயர்ச்சொற்களுடன் [-lañgətə] என்னும் உருபும் பயின்றுவருகின்றது.

உதாரணம் - [aniddə subramaniyan dostarə mahattəya: lañgətə yanəva:] - நாளை மறுதினம் வைத்தியர் சுப்பிரமணியத்திடம் போவேன்.

உதாரணம் - அவரிட்ட கேளுங்கோ

[eya:gen ahanna]

மற்றும் தமிழ்மொழியில் [-idda] + [-itukkɨ] என்ற அமைப்பு பயன்படுத்துவதைப்போல சிங்களமொழியில் [-laŋgə] என்பதுடன் [-tiyenəva] [innəva] என்பவற்றையும் இணைத்துப் பயன்படுத்துகின்றனர்.

உதாரணம் - [aniddə subramaniyan dostarə mahattəya: lañgətə yanəva:] - நாளை மறுதினம் வைத்தியர் சுப்பிரமணியத்திடம் போவேன்.

அவரிட்ட காசு இருக்கு - [eya:laŋgə salli tiyenəvə]

தமிழ், சிங்கள மொழிகளில் இவ்வேற்றுமை எடு, வாங்கு முதலிய செயற்பாடுகளைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம் - அவர் நாளைக்கு என்னட்ட காசு வாங்குவார். [-eya: heta mageŋ salli gannəva:]

**viii. முடிவுரை**

வெவ்வேறு மொழிக்குடும்பத்தைச் சேர்த்த தமிழ், சிங்கள மொழிகளினது வேற்றுமை அமைப்புக்களை நோக்குகின்றபோது அவற்றிற்கிடையே நுணுக்கமான வேறுபாடுகள் காணப்படுகின்ற அதேவேளை சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. அதாவது இவ்விரு மொழிகளினதும் வேற்றுமையுருபுகள் அல்லது அவற்றின் வடிவங்கள் வேறுபட்டதாக அமைந்திருந்தாலும் அவற்றினூடாக வெளிப்படுத்தப்படுகின்ற பொருள்கள் பெருமளவில் ஒன்றாகவே காணப்படுகின்றன. எனினும் இவ்விருமொழிகளிலும் வேற்றுமையுருபுகள் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் வேறுபாடுகள் காணப்படுவதோடு சில சந்தர்ப்பங்களில் இருமொழிகளிலும் ஒரே சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ், சிங்கள மொழிகளின் எழுத்துவழக்கில் உடனிகழ்ச்சி, குறிப்பீட்டு வேற்றுமைகள் தனித்தனியான வேற்றுமையாக இல்லாவிட்டாலும் அவை கருவி, இட வேற்றுமைகளுக்குள்ளே உள்ளடக்கப்படுகின்றன.

சிங்கள பேச்சுவழக்கில் வேற்றுமை உருபுகள் உயிருள்ள, உயிரற்ற பெயர்ச்சொற்களுக்கென தனித்தனியாக அமைந்துள்ளன. ஆனால் தமிழ்மொழியில் உயிருள்ள, உயிரற்ற பெயர்ச்சொற்களுக்கென தனித்தனியான வேற்றுமை உருபுகள் பயன்படுத்தப்படுவதில்லை.

சிங்கள எழுத்துவழக்கில் ஒருமை, பன்மைக்கென தனித் தனியான வேற்றுமை உருபுகள் காணப்படுகின்றன. ஆனால் தமிழ்மொழியில் ஒருமை, பன்மைக்கென தனித்தனியான வேற்றுமை உருபுகள் பயன்படுத்தப்படுவதில்லை.

தமிழ்மொழியில் விளிவேற்றுமைக்கு வேற்றுமை உருபு இல்லை. எனினும் [a], [o] ஆகிய ஒலிகள் நீட்சி பெற்று பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சிங்கள மொழியில் விளிவேற்றுமைக்குரிய உருபுகளாக [e], [ee] முதலிய உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வகையில் தமிழ், சிங்கள மொழிகளின் வேற்றுமை அமைப்புக்களில் நுணுக்கமான வேறுபாடுகள் காணப்படுகின்ற அதேவேளை சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இரண்டாம் மொழியாக தமிழ், சிங்கள மொழிகளைக் கற்கின்றபோதும் கற்பிக்கின்றபோதும் ஒப்புநோக்கி கற்பதும் கற்பிப்பதும் சிறப்புடையதாகும். அந்தவகையில் இவ்விரு மொழிகளினதும் வேற்றுமைகள் தொடர்பான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஒப்புமை, முரண்நிலை ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொள்வது சிறப்புடையதாக அமைவதுடன் எளிமையான கற்றலுக்கும் வழிவகுக்கும்.

**உசாத்துணைகள்**

1. ரங்கநாயகி மஹாபாத்ரா, (1985), இன்றைய தமிழ் இலக்கண வழக்கும் பேச்சு வழக்கும், பாரிநிலையம், சென்னை.
2. அகத்தியலிங்கம்.ச., (1997), திராவிடமொழிகள் - ii, மணிவாசகர் வெளியீட்டு நிலையம்.
3. Karanatillake.W.S., (1998),An Introduction to spoken Sinhala, M.D. Gunasena &Co.Ltd,pa. 28.
4. ஸ்ரீ இந்துஸனண், (2004), சுஜிகலா சிங்கள தமிழ் ஆசிரியன் - பாகம் ஐ , சுஜிகலா இன்டஸ்ரீஸ் 104/6, செட்டியார்தெரு, கொழும்பு.
5. சொக்கலிங்கம்.க., (1981), இலக்கணத்தெளிவு, சுப்பிரமணிய புத்தகசாலை யாழ்ப்பாணம், ப.41.